அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு 2023/2024

# தமிழ் - ஆண்டு 10

**புலன்மொழி வளத்தேர்வு** **வாசித்தல்**

காலையில் கதிரவன் பொற்கொடியை உயர்த்துகிறான். ஒளிப்படை உலகை ஆட்சி செய்கிறது. காலநிலை மாற்றமும் வானிலை மாற்றமும் தானாகவே நிகழ்வதாக எண்ணத்தோன்றுகிறது. அது உண்மை அல்ல. இவ்வுலகில் ஒவ்வொரு நிகழ்வின் பின்புலத்திலும் ஒவ்வொரு காரணி காணப்படுகிறது. இயற்கையின் படைப்பில் அமைந்த இயக்கத்திற்குக் கதிரவன் காரணமாய் அமைகிறான் என்று அறிவியலாளர் கூறுவர். உலக அழகிற்குக் காரணம் கதிரவன் என்று புலவர் பெருமக்கள் கூறுவர். எங்கள் வயல்கள் விளையவும் தோட்டங்கள் துளிர்விடவும் துணைபுரிபவன் கதிரவன் என, உலகிற்கு உணவு வழங்கும் உழவர் பெருமக்கள் கூறுவர்.

தகிக்கும் வெய்யிலில் பாத்தி கட்டி நீரைத் தேக்கி ஆவியாக்கி உப்பு விளைவிக்கும் வணிகனுக்கும் கதிரவனே வணக்கத்துக்குரியவன். எரிக்கும் வெய்யிலில் கருகும் செடி கொடி , பாளம் பாளமாய் வெடிக்கும் தரை என இத்தனைக்கும் நோயும் கதிரவனே மருந்தும் கதிரவனே! கடலில் அலைகள் அமைதியாய் அடிக்க, உப்புக்காற்று மெதுவாய் வீச, வள்ளத்தில் வலையோடு மீன் பிடிக்கச் சென்று திரும்பும் மீனவனின் விடியலும் கதிரவன் விடியலோடு கலந்ததே!